(2) இலங்கையைச் சேர்ந்த மௌரி என்ற இயந்திரப் படகு என். ஜே. 821 பாம்பன் பகுதி கடலில் நைலான் மீன் பிடி வலைகளையும், பாய்மரக் கருவிகளையும் அபகரித்துச் சென்றுள்ளது குறித்து.

திரு. ஆர். சக்தி மோகன் : துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக்குறித்து மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"இலங்கையைச் சேர்ந்த மௌரி என்ற இயந்திரப்படகு என். ஜே. 821 21—3—1975 அன்று நடுக்கடலில் இந்தியாவைச் சேர்ந்த பாம்பன் பகுதி கடலில் ஜே. அந்தோணிசாமி, எஸ். தாஸ் நிவாஸ் மற்றும் பலரைத் தாக்கி, அவர்களிடமிருந்து 43 நைலான் மீன் பிடி வலைகளையும் மற்றும் ரூ. 40 ஆயிரம் பெறுமானமுள்ள பாய்மரக் கருவிகள், மீன்பிடிக் கருவிகள் முதலியவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து".

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : துணைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தலைவரிட மிருந்து 24—3—1975 அன்று ஒரு தந்தி இவ்வலுவலகத்திற்கு வரப் பெற்றது. அதில், பாம்பன் பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். தாஸ் நிவாஸ் மற்றும் ஜே. அந்தோணிசாமி ஆகியோருக்கு உரிமையான நாட்டுப்படகுகளில் இருந்த பத்து மீனவர்களை 21—3—1975 அன்று கடலில் "மௌரி" என்று பெயரெழுதப்பட்ட என். ஜே. 821 என்ற இலங்கை கடலிலிருந்தவர்கள் தாக்கினர் என்றும், நாற்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள 43 நைலான் வலை மற்றும் மீன்பிடி உபகரணங்களைக் கவர்ந்து சென்று விட்டனர் என்றும் புகார் செய்யப்பட்டிருந்தது.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மீனவர் திரு. அந்தோணிசாமி பர்னாந்து மற்றும் சேசையா பர்னாந்து ஆகியோர் இச்சம்பவம் குறித்து இராமேசுவரம் காவல்துறையில் புகார் மனு கொடுத்துள்ளனர். மேலும், இராமநாத புரம் மாவட்ட காவல்துறை அலுவலர் சென்னையிலுள்ள குறிப்பு புலனாய்வுப் பகுதி மண்டல காவல்துறை அலுவலருக்கு 29—3—1975ல் ஒரு அறிக்கை அனுப்பியுள்ளார். அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்ட சம்பவம் கச்சத்தீவிற்கு அப்பால் நெடுந்தீவிற்கருகில் (இந்தியக் கடல் உரிமை கடற்பரப்புக்கு அப்பால்) சர்வதேச கடற்பரப்பில் நடந்ததால், காவல்துறை யினரால் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்வதற்கில்லையெனக் கூறியுள்ளார். மேலும் அவர் இந்த சம்பவம் குறித்து இலங்கை தூது வருடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்துள்ளார்.

எனவே இதுகுறித்து உடனடியாக இலங்கை தூதுவருடன் தொடர்பு கொண்டு இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வலை மற்றும் மீன்பிடி சாதனங்களை உடனடியாக மீட்டுத்தர ஆவன செய்வதுடன் இது போல மீண்டும் நிகழாதிருக்கத் தக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளுமாறு

மீன் துறை இயக்குநர் கோரியுள்ளார். மீன் துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் மேற்படி இந்திய மீனவர் இழந்த வலைகளையும் மற்ற பொருள்களையும் இலங்கை மீனவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கவும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நிகழாதிருக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் இலங்கை தூதுவருடன் தொடர்புகொண்டு இதுகுறித்து ஆவன செய்யுமாறு மைய அரசினைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆர். சக்தி மோகன்: துணைத் தலைவரவர்களே, இம்மாதிரி இலங்கை இயந்திரப் படகுக்காரர்கள் நமது எல்லை வரம்புக்கு உட்பட்ட நமது கடலிலேயே அடுத்தடுத்து இயந்திரப் படகுகளைக் கொண்டு வந்து நம்மவர்களின் விலையுயர்ந்த உபகரணங்களைப் பறித்துச் சென்று விடுகின்றார்கள். இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. கச்சத்தீவிற்கு அப்பால் நடந்தது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கச்சத் தீவை நாம் தானம் கொடுத்த நிலையிலும்கூட எல்லாப் பகுதியிலும் மீன் பிடிக்கச் செல்லலாம் என்ற ஒப்பந்தம் மத்திய சர்க்கார் மூலம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருந்தும்கூட அவர்கள் அதை மீறி, இயந்திரப் படகுகளைக் கொண்டுவந்து நம்முடைய மீனவர்கள் அரும்பாடுபட்டு திரட்டிய விலையுயர்ந்த மீன்களையும் நைலான் வலைகளையும் பறித்துக் கொண்டு செல்வதென்றால், அதுவும் தொடர்ந்து நடைபெறுவது என்றால், அது உண்மையில் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அது நாம் சகித்துக்கொள்ள முடியாத ஒரு கொடுமையாகும். நமது மாநில அரசு மத்திய அரசு மூலமாகவோ, நேரடியாகவோ இலங்கை அரசுக்கு எழுதி இந்த மாதிரிச் சம்பவங்கள் மீண்டும் நிகழா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது நம் மீனவர்களிடமிருந்து பறிக்கப் பட்டிருக்கின்ற ஏறத்தாழ ரூ. 50 ஆயிரம் பெருமதிப்புள்ள நைலான் வலைகள் மற்றும் பொருள்களை உடனடியாக பெற்றுத் திரும்பக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஒருகால் அந்த வலைகள் அவர்களிடமிருந்து திரும்ப வருவதற்கு காலம் தாழ்த்தப் படுமேயானால் அந்த நம் பகுதி மீனவர்களுக்கு அந்த ரூ. 50 ஆயிரம் பெருமதிப்புள்ள நைலான் வலைகளை நம்முடைய மாநில அரசு அவர்களுக்கு உடனடியாகக் கொடுத்து உதவுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி.வி.எம். அண்ணாமலை: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கோரிய கருத்து அனுதாபத்தோடு சிந்திக்க வேண்டிய கருத்து என்றாலும் உண்மையாகவே இன்றைய தினம் மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். 12 மைல்களுக்கு அப்பால் நடை பெறுகின்ற சம்பவத்தை, நிகழ்ச்சியை இன்றைய தினம் இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டு நமது மாநில காவல் துறை மூலமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது என்ற சூழ்நிலை சமீபத்தில் அரசுக்கு, அதன் காவல் துறைக்கு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திலிருந்து கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு மேற்கொண்டு நடவடிக்கை மாநில அரசு எடுக்க வேண்டுமென்று சொன்னால், மாநில அரசு எடுப்பதற்குரிய எல்லா வாய்ப்

யையும் மாநில சுயாட்சி மூலமாகத்தான் பெற முடியும் என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலவாற்றாலும், பல முறைகளிலும் எடுத்துக்கூறி வந்ததை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சீரிய கருத்தை நீங்களும் மற்றும் மத்திய அரசும் உள்ளபடியே ஏற்பீர்களானால், இது போன்ற சாதாரண நடைமுறை நடவடிக்கைகளைப் பற்றி மாநில அரசே ஆய்வுசெய்து, இலங்கை சர்க்காரோடு தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான உடைமைகளை பெற்றுத் தருவதற்கும், அந்தக் கொடுமைக்கு ஆளாக்குகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் வேண்டிய காரியங்களை முறையாகச் செய்ய முடியும். அதற்கான வாய்ப்பு இன்றைய தினம் இருக்கின்ற மாநில அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு முறையான தகவல்களை நம்முடைய துறையின் மூலமாக அனுப்பியிருக்கிறது. மத்திய அரசுதான் இது சம்பந்தமாக புலன் ஆய்வு செய்து, மேற்கொண்டு அங்கிருக்கின்ற இந்திய தூதுவர் மூலமாக இலங்கை சர்க்காரிடத்திலே முறையாகப்பேசி அதுபற்றி நியாயமான தீர்ப்புகளைப் பெற்று வழங்க வேண்டிய நிலைமையில் நாம் காத்துக் கொண்டிருக்கின்றோம். இப்போது நாடு பூராவும் வறட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் எங்கு பார்த்தாலும் வறண்டு இருக்கின்ற நேரத்தில், பஞ்சத்தைப் போக்குவதற்கு மிக அருமையாகத் தீவிரமாகத் திட்டங்களைப் போட்டு நமது அரசு நிறைவேற்றி வருகின்ற நேரத்தில், தமிழக ஆட்சி பெரும் அளவிலே ரூ. 50 ஆயிரம் இழப்பினை மீனவர்களின் இழப்பினை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பொருளாதார வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி யோசித்து அதைப் பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

5. அரசின் சட்ட முன் வடிவு.

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

@ 48–51 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.